**ARTICLE 01 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00012**
Vol. 20, No. 01 (October 2026) – Part I | pp. 1–4
Received: 30 September 2026 • Accepted: 1 October 2026

# சோ தர்மனின் சூல் நாவல் கூறும் 'கிராம வாழ்வியல்'

**முனைவர். கலா கோபி க**[1,*]

[1]இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை ,அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சங்கரன்கோவில்., India

***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** முனைவர். கலா கோபி க — kkalagopi77@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

சோ தர்மன் ஐயா படைத்த சூல் நாவலில் பண்பாட்டுக் கூறுகளை இக்கட்டுரை ஆராய்கிறது .வேளாண் தொழிலில் விதை பற்றிய குறிப்புகள் கூறப்பட்டுள்ளது .கடலை விதை ,வற்றல் விதை , பருத்திவிதை மற்றும் அவற்றிற்கு பயன்படுத்தப்படும் உரம் பற்றிய தகவல்கள் கூறப்பட்டுள்ளது

**Keywords / திறவுச் சொற்கள்:** விதைகள்- கடலை விதை- வற்றல் விதை -பருத்தி விதை- உரம்.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** க, மு. க. கோ. (2026). சோ தர்மனின் சூல் நாவல் கூறும் 'கிராம வாழ்வியல்'. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 1, –.

## முன்னுரை

சங்க காலம் தொட்டே தற்காலம் வரை கிராம வாழ்வியல் என்பது பஞ்சத்திலும் குடும்பங்கள் இன்பத்தில் வாழ்ந்த வாழ்க்கையை கூற முடியும். தினசரிந்த பகுதிகள் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என உண்டு. அனைத்து நிலங்களுக்கும் பாலை நிலம் பொதுவானதாகும் மற்ற நிலங்களைவிட மருத நிலம் மட்டும் பாலையுடன் நெருங்கிய தொடர்பு வைத்துள்ளது. மருத நிலப் பகுதியில் ஆற்றை மையமாகக் கொண்ட நிலங்கள் வாழைக்கு எதிரியாகி வாழ்கிறது. ஆனால் மழையை மட்டும் நம்பி வாழ்ந்த மருத நிலங்கள் பாலை நிலத்தை தன்னகத்தே வைத்துக் கொள்கிறது. விவசாய வேலையை தொடங்குவதற்கு முன் அதில் நட்சத்திரம் மாதங்கள் பார்த்து உழவு வேலை ஆரம்பிப்பது பற்றி 'திருமலை முருகன் பள்ளு 'என்ற நூலில் பெரியவன் கவிராயர் அவர்கள் கூறுவதாக , "திங்கள் வாரம் என்று மூல நட்சத்திரம் செய்ய பஞ்சமி பார்க்கும் சிங்க " மூல நட்சத்திரம் தோன்றிய மாதத்தில் இன்று பஞ்சமி நாளிலே சுபயோக தினத்திலே உழவு வேலைகளை நாம் தொடங்குவோம் என்று கூறினார்கள். இவை நீர் நிலைகள் நிறைந்த மருத நில மக்கள் பகுதியை சார்ந்தது. ஆனால் தென் தமிழ்நாட்டில் குறிப்பாக குறிப்பாக கோவில்பட்டி வட்டார பகுதிகளையும் கரிசல் பூமி என்று அழைக்கப்படுகிறது. அதில் தம் படைப்புகளில் கரிசலை வேர்வையில் கரைத்து புத்தகக் கோட்டை கட்டியவர் சோ தர்மன். அவர் படைப்புக்களில் சாகித்ய அகாடமி விருது பெற்ற படைப்பு சூழ் நாவல். அதில் வீசக்கூடிய கிராம வாழ்வியலை வாருங்கள் கொஞ்சம் வாசித்து வசிப்போம்.

Vol. 20, No. 01 (October 2026) – Part I • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

## வயல்வெளி தோற்றம்

அசையா சொத்து வயல் காடுகள் . கோடைகாலத்தில் தூரம் பார்த்தால் கானல் நீரில் அசையும் சொத்தாகி காட்சியளிக்கும். நாவலில் "கரைமேல் நின்று வடக்காமல் பார்த்தால் கண்ணட்டும் தூரம் வரை கலைத்துப் போட்ட சீட்டு கட்டாய் வயல் காடுகள்" எனக் கூறுகின்ற ஆசிரியர். சதுரம் செவ்வகம் முக்கோணம் என விவசாயிகளின் பொலி அதாவது வரப்பு காட்சி தருவது பற்றி அழகாய் சித்தரிக்கிறார். ஒவ்வொரு விவசாயிக்கும் எல்லை பகுப்பு உண்டு. அக்காலத்தில் ஒரு வருஷத்தை ஒருவர் பிடுங்குவது கிடையாது இருப்பினும் ஒரு குத்து மதிப்பான தன்னுடைய நிலங்கள் எல்லை வகுப்புக்கு வரப்பு வைக்காமல் சிறு பொடியாக அதைப் பார்த்து தன்னுடைய விவசாய வாழ்க்கையை நடத்தி வந்தது குறிப்பிடத்தக்கது.

## கண்மாய்க்கரை

விவசாயத்திற்கும் நீர் ஆதாரங்களை முக்கியமானது. அதில் ஆறு ,கிணறு ,குளம், கண்மாய் , ஏரி போன்றவை காண முடிகிறது. நாவலில் கண்மாய்தான் நீர் ஆதாரம். வருடம் தோறும் கண்மாயை சுத்தம் செய்து பராமரிப்பது வழக்கம். அதற்கு மராமத்து என்று அழைப்பார்கள்.

நாவலில், "எட்டையபுரம் ராஜாவின் கண்காணிப்பில் உள்ள எல்லா கண்மாய்களும், ஊரணிகளும் தெப்பங்களும், நீராவிகளும் 'குடிமராமத்து 'செய்யப்பட்டு விவசாயத்திற்கு மழை நீர் சேமிக்க தயார் நிலையில் வைக்கப்படும்" என்று நாவலில் கூறுவதன் மூலம் அனைவருக்கும் பொதுவான வேலையாக கண்மாயை சுத்தம் செய்யும் பணி நடைபெறுகிறது.

சுத்தம் செய்த மகளை கரையில் இரு பக்கமும் போட்டு கரையை பலப்படுத்தும் வேலையை ஒன்று கூடி செய்ததை நாவல் கூறுகிறது . கரையின் முக்கியத்துவத்தை, "வெட்டிய மண் கரம்பைகளை இரு பக்கமும் சுமந்து கொண்டு போய் கொட்டினார்கள் பெண்கள்",

" ஏய் , அகலம் போதும் ஒரு மாட்டு வண்டி போயி வர்ற அளவு இருந்தா போதும் அகலமா தோண்டினா அடிச்சாலும் கரை இழந்து போகும்" என்று கூறுவதன் மூலம் காண முடிகிறது. கரை சிறிது காலம் திறந்து வைக்கப்படும் . அருகில் உள்ள ஊர்க்காரர்கள், சொந்த ஊரில் உள்ளவர்கள் மாட்டு வண்டியை எடுத்து வந்து கரம்பை மண்ணை எடுத்து அவரவர் காட்டில் கொண்டு சென்று தட்டி வருவார்கள். நீரில் கிடந்த மண்ணிற்கு பயிர்களை வளர்க்கும் சக்தி உண்டு என்பது நாவலில் கூறப்படுகிறது.

## குப்பை அரிப்பு

மழைக்காலத்தை எதிர்பார்த்து நிற்கும் வானம் பார்த்த கருகரு என்று கரிசல் மண்ணை அலங்காரம் செய்து புதுப்பெண் போன்று காட்சிப்படுத்துவார்கள் . அதில் ஒன்றுதான் கரம்பை மண் அடிப்பது. அது முடித்த பிறகு ஊரில் உட்பகுதியில் கால்நடை கழிவுகளை சேமித்து வைத்திருப்பது . அதாவது கண்மாய்க்கரை அடித்த பிறகு குப்பை அடிப்பு நடைபெறும் ஆடு, கோழி ,மாட்டுச்சாணம் போன்றவற்றை தொழுவத்திலேயே ஓரமாய் வைத்திருப்பார்கள். அந்த குப்பைகளை அள்ளிக்கொண்டு காட்டில் பரப்பி விடுவார்கள். இயற்கை உரம் என்றால் இதுவல்லவோ. அதனை, "கண்மாய்க்கரை முடிந்துவிட்டால் குப்பையடிப்பு

கரம்பை மண் கும்ிகளுக்கு அடுத்த குப்பை கும்மி வரிசைகள்" காட்டில் குமித்து வைக்கப்பட்ட அந்த குவியல்களை சிதறிபோட்டு தான் கோடை உழவு நடைபெறும்.

## மழை குறித்த செய்திகள்

வானம் பார்த்த பூமி என்பது வெறும் வானத்தைப் பார்ப்பது மட்டுமல்ல . வானிலைகளை ஆராய்ந்து மழை எப்போது வரும்? காலம் தாழ்த்துமா ? அதிகமாக மழையா? தெற்கத்தி மலையா? வடக்கத்தி மலையா? கண்மாய் நிறையுமா? குறைவுதான? என்பதை கணித்து காட்டுவது வானிலை ஆய்வு மையம் அல்ல. சுற்றியுள்ள இயற்கை சூழலை.

அதனை ,

"வெயிலில் உக்கிரம் ஏற ஏற மழைக்கான அதிகாரம் கூடிக் கொண்டே போகும். பகலிலும், இரவிலும் மழைக்கான அறிகுறிகளை மக்கள் கவனித்துக் கொண்டே இருப்பார்கள் ". என்று மக்கள் கூறுகின்ற இடமெல்லாம் இதுபோன்ற பல்வேறு பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கும். என்று நாவலில் மக்கள் பேசுவதாக காட்டப்படுகிறது.

## தூக்கணாங்குருவி கூடு

கிராமப்புறங்களில் விலங்குகள் மற்றும் பறவைகளை வைத்துக்கொண்டு இந்த நேரத்தில் இன்னது நடக்கும் என்று தீர்மானித்துக் கொள்வார்கள் . அதுபோலத்தான் தூக்கணாங்குருவி கூடு. இதனை வைத்துக்கொண்டு வரப்போகின்ற மழை வடக்குத்தி மலையா? அல்லது தெற்கத்தி மலையா ?என்று காண்பது வியப்பாக ஒன்றாக இருக்கிறது. நாவலில் இதனைப் பற்றி "தூக்கணாங்குருவி கூடுகளின் கீழ்ப்பக்கம் உள்ள வாசல் போக பக்கவாட்டில் ஒவ்வொரு கூட்டிலும் ஒரு வாசல் இருக்கும் . இந்த பக்கவாட்டு வாசல்கள் தெற்கு பக்கம் பார்த்தபடி பெரும்பான்மையாக இருந்தால் அந்த வருஷம் வடகிழக்கு பருவமழை , அதாவது வடக்கத்தி மலை ஜாஸ்தி . பெரும்பாலான கூடுகளில் வாசல்கள் வடக்கு பக்கம் பார்த்தபடி இருந்தால் தெற்கத்தி மலை அதாவது தென்மேற்கு பருவமழை ஜாஸ்தி " என்று கூறுவதன் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. அதற்குத்தான் நம் முன்னோர்கள் ". நீரின் ரமையா உலகம் போல" நீரின் முக்கியத்துவத்தை எடுத்து இயம்புகின்றனர்.

## கண்மாய் மரத்தின் கூடுகள்

கண்மாய்க்கு உள்ளே கரை ஓரங்கள் சுத்தம் செய்யப்பட்டிருக்கும். கரைக்கு எதிர் திசையில் உள்ள அதாவது மழை நீர் வர வழி பகுதியில் கண்மாய் நடுவில் கருவேல மரங்கள், வேல மரங்கள் காணப்படும். மரங்களில் அடிப்பகுதி தண்ணீரில் மூழ்கி இருக்கும். மேல் பகுதி மட்டும் தான் வெளியே தெரியும் . அந்த மரங்களில் கூடு கட்டும் பறவைகளை வைத்து மழை எவ்வாறு இருக்கும் என்பதை கணக்கிட்டு காண்பார்கள் .. அதனை நாவலில், "அந்த மரங்கள் கூடுகட்டும் பறவைகள் அருகே மரங்களில் உச்சிக் கொப்பில் கூடுகள் கட்டியிருந்தால் , அந்த வருஷம் மலை ஜாஸ்தி. கண்மாய் மரங்கள் முங்கும் அளவிற்கு நிறை பெருக்கு . மரங்களில் உள்ள தாடிக்கொம்புகளில் கூடுகள் நிறைய கட்டியிருந்தால் , அந்த வருஷம் மழை மத்துவம். கண்மாய் அரை பேருக்கு அல்லது முக்கால்

Vol. 20, No. 01 (October 2026) – Part I • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

பெருக்கு" என்று கண்மையில் உள்ள பறவைகளின் கூட்டினை வைத்துக்கொண்டே மழை அளவு அதிகமாக குறைவாய் என்று கூறுகின்றனர்.

## நிலா வெளிச்ச வேலைகள்

நிலா வெளிச்சம் என்பது கிராமப்புறங்களில் சிறுவர்கள் விளையாடுவதற்கு மட்டுமல்ல , அவை சிறு சிறு வேலைகளுக்கு கூட உதவுகிறது. " குப்பை அடுப்புக்கு நிலா வெளிச்சம் ரொம்பவும் தோதா இருக்கும். அதே போல் இரவு கமலை இறக்கவும் , தண்ணீர் பாய்ச்சவும் பெரும்பாலும் நிலாவே பயன்படும். கோடை காலங்களில் உளவு வேலைகள் முடித்து விட்டால் ஊரே மழையை எதிர்பார்த்து காத்திருக்கும்... விதை விதைப்பிற்கு வித்துக்களை தயார் பண்ணி பத்திரப்படுத்துவது நிலா வெளிச்சத்தில்தான் " என்று பல்வேறுபட்ட வேலைகள் இரவு நேர நிலா வெளிச்சத்தில் நடைபெறுவது என்பது பற்றி நாவலில் சோ தர்மன் ஐயா அவர்கள் கிராமப்புற மண்வாசனை நமக்கு எடுத்துக் காண்பிப்பது இன்னும் ஆச்சரியத்தில் வாழ்த்துகிறது.

## முடிவுரை

நாவல் மன்னர்கள், பாளையக்காரர்கள் ஆட்சி செய்த காலம் முதல் சுதந்திரம் அடைந்த காலப்பகுதியில் இருந்த செய்தி மட்டும் கூறியிருக்கிறார் ஸ்ரீதர்மன் அவர்கள். தொழில்நுட்ப வளர்ச்சி இல்லாத அந்த காலத்தில் விவசாய நிலங்கள் பராமரிப்பு என்பது சிறப்பான முறையில் நடைபெற்று உள்ளது . கண்மாய் பராமரிப்பு அதில் ஒருங்கிணைந்த மக்கள் மராமத்து வேலை நன்முறையில் நடந்தேறியுள்ளது. காட்டை தயார் நிலையில் வைப்பது , குப்பை அடிப்பது, உழவு செய்வது மற்றும் பறவைகளின் மலை வேண்டி விசாரிப்பது , விதைகளை பக்குவப்படுத்துவது , ஓய்வு நேரங்களில் மகிழ்ச்சியாக இருப்பது என்று கிராமத்தில் வாசனை சூழ் நாவலின் மூலம் சோ தர்மன் ஐயா அவர்கள் வழங்கிய வழங்கியது போற்றுதல் கூறியது.

## அடிக்குறிப்புகள் (Notes)

1. நூல். :சூல்
2. ஆசிரியர்: சோ தர்மன்
3. பதிப்பு : 5 ... 2016.
4. வெளியீடு : அடையாளம் பதிப்பகம்.
5. நூல் : திருமலை முருகன் பள்ளு
6. ஆசிரியர் பெரியவன் கவிராயர்
7. பதிப்பு: சக்தி காரியாலயம், சென்னை.
8. பதிப்பு ஆண்டு:1944
9. நூல்: தமிழ் இலக்கிய வரலாறு ஆசிரியர்: கீ ராஜா
10. பதிப்பகம் :நீர் செஞ்சுரி புக் ஹவுஸ்
11. ஆண்டு. : 2017 அம்பத்தூர், 908.

© 2026 முனைவர். கலா கோபி க. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..